## சபரகமுவ மாகாண சபை - 2016

சபரகமுவ மாகாண சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப தயாரிக்கப்படுதலும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதுமானளவு தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் காணப்படும் தொகைகளுக்கும் வெளிப்படுத்தல்களுக்கும் உபயோகப்படும் கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, சபரகமுவ மாகாண சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 ஏனைய கணக்குகள்

2017 யூலை 25 இல் உள்ளவாறு மாகாண சபையின் மீளாய்வாண்டிற்கான ஏனைய கணக்குகள் சமர்ப்பிக்கப்படுவதிலான முன்னேற்றம் பின்வருமாறு.

| | | மொத்தக் கணக்கு | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்கு | 27 | 27 | - |
| (ii) | வருமானக் கணக்கு | 01 | 01 | - |
| (iii) | மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு | 24 | 24 | - |
| (iv) | வணிக முற்பணக் கணக்கு | 10 | 09 | 01 |
| (v) | நிதியக் கணக்கு | 02 | 02 | - |
| (vi) | சட்டவாக்கக் கணக்கு | 05 | 05 | - |
| (vii) | அங்கத்தவர் முற்பணக் கணக்கு | 02 | 02 | - |
| | மொத்தம் | 71 | 70 | 01 |

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துக்களின் கீழ் சுட்டிக் காட்டப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட முற்பண மீதி ரூபா 9,272,038 சாதகமற்ற மீதியாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரியிலிருந்து நேரடியாகப் பெறப்பட்ட மானியமான ரூபா 248,000,000 நிதியக் கணக்கில் உள்ளடக்கப்படவில்லை.

(இ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் மாகாணத் திணைக்களங்களிலிருந்து பெற வேண்டிய கட்டு நிதி மீதியில் உள்ளடங்கிய விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மீதி ரூபா 2,303,535 ஆகும். எவ்வாறாயினும், அத் திணைக்களத்தினது ஒதுக்கீட்டுக் கணக்கின் கட்டு நிதி தொடர்பான பொழிப்பறிக்கையின் பிரகாரம் மீதி ரூபா 9,686,937 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 7,383,402 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.4 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் 03 கணக்கீட்டு விடயங்களது மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 1,277,367,735 ஆகியபோதும், உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் அக் கணக்குகளது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,264,720,291 ஆகியமையால் ரூபா 12,647,444 இணக்கமின்மை நிலவியது.

**2.2.5 தொங்கற் கணக்கு**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 02 திணைக்களங்களது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் ரூபா 2,371,255 கூட்டுத் தொகையுடைய இனங்காணப்படாத மீதிகள் இருந்தன.

**2.2.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

ஓராண்டிற்கு மேற்பட்ட பெற வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 46,204,305 ஆகும். கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளது மீதியின் பெறுமதி ரூபா 3,567,822 ஆகும்.

**2.2.7 பதில் கிடைக்கப் பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் வழங்கப்பட்ட 22 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2017 யூலை 25 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 369,338,668 ஆகும்.

**2.2.8 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை**

நூறு நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களது கூட்டுறவுத் தன்மையை அபிவிருத்தி செய்து செயலாற்றலுடன் கூட்டுறவுச் சங்கங்களுடன் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 957,000 செலவிடப்பட்டிருந்தது. அதில் உணவுச் செலவினமாக ரூபா 412,300 மற்றும் போக்குவரத்துச் செலவினமாக ரூபா 481,000 எனக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக நிறைவேற்றப்பட்ட கடமைகளை உறுதி செய்தற்குரிய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.2.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) அதிகாரச் சட்டங்கள்<br>மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 226(5) மற்றும் (6) ஆம் உப பிரிவுகள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 183(5) ஆம் உப பிரிவு மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(8) மற்றும் (9) ஆம் உப பிரிவுகள் | தண்டப்பணம் தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தீர்மானம் அறிவிக்கப்படும் நாள் முதலாக 14 நாட்களுக்குள் குறித்த நபரால் உள்ளூராட்சி ஆணையாளரிடம் குறித்த தொகை செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து அல்லது மேன்முறையீடு செய்யப்பட்டிருக்காதவிடத்து குறித்த நபர் வசிக்கும் பிரதேசத்துக்கு உரிய நீதிமன்ற அதிகாரம் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டு குறித்த தொகையை அறவிடுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமாயினும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சில சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த தண்டப்பணச் சான்றிதழ்களில் 2017 யூன் 30 ஆந் திகதியளவில் 6 தண்டப்பணச் சான்றிதழ்களுக்குரிய ரூபா 1,929,509 கூட்டுத் தொகை அறவிடப்படாதிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) XIX அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு | மாகாண சபைக்குரிய 12 மனைகளில் 2003 முதல் 2016 வரை குடியிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த ஏற்பாடுகளுக்கு முரணாக மனைகளுக்கான வாடகை அறவிடப்பட்ட காரணத்தால் ரூபா 2,577,548 வருமானத்தை மாகாண சபை இழந்திருந்தது. |
| (ii) XIX அத்தியாயத்தின் 7.2 ஆம் உப பிரிவு | குத்தகைக் காலத்தைக் கடந்தும் மனைகளில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து மனைகளுக்கான வாடகைக்குப் புறம்பாக சம்பளத்தில் 8 சதவீதம் மற்றும் அம் மனைக்களுக்குரிய அப்போதைய திறந்த சந்தையில் நிலவும் வாடகை ஆகிய இரண்டினதும் கூட்டுத் தொகை தண்டப் பணமாக அறவிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2014 ஏப்ரல் முதல் சம்பளத்தில் 8 சதவீதம் மாத்திரம் தண்டப்பண வாடகையாக அறவிட்டிருந்த சந்தர்ப்பங்கள் நிலவின. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| | நி.பி 571(3) | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 நிறுவனங்கள் தொடர்பான ரூபா 39,851,331 வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | சனாதிபதி செயலகச் சுற்றறிக்கைகள் | |
| | 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அரசாங்கச் செலவினச் சுற்றறிக்கை | குறித்த சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளுக்கு முரணாக வெளியிடப்பட்ட 2009 யூன் 17 ஆந் திகதிய 10/4/3/73(ii) ஆம் இலக்க சபரகமுவ மாகாண ஆளுநரது சுற்றறிக்கையின் அடிப்படையில் 2015 சனவரி 01 முதல் 2016 மார்ச் 31 வரை தலைமை அமைச்சர் உட்பட அமைச்சர்களுக்கு தொலைபேசிப் படியாக ரூபா 1,125,000 மற்றும் குறித்த சுற்றறிக்கை மற்றும் 2009 யூன் 10 ஆந் திகதிய எஸ் 205 ஆம் இலக்க சபரகமுவ மாகாண அமைச்சரவைத் தீர்மானத்தின்படி தலைவருக்கும் பிரதித் தலைவருக்கும் தொலைபேசிப் படியாக ரூபா 1,323,385 கூட்டுத் தொகையும் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு 45 அங்கத்தவர்களுக்கு தொலைபேசிப் படியாக ரூபா 8,289,290 கூட்டுத் தொகையும் அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2015 சனவரி 01 முதல் 2016 மார்ச் 31 வரை சபரகமுவ மாகாண சபை அங்கத்தவர் 55 பேருக்கு சாரதி மற்றும் எரிபொருள் படியாக ரூபா 35,860,447 வழங்கப்பட்டுமிருந்தது. |
| (உ) | அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | |
| | (i) 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | 05 வெளிநாட்டுப் பயணங்களின்போது வானூர்திச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 2,875,936 கூட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின்போது அக்கம்பனியிலிருந்து வானூர்திச் சீட்டுக்களைப் பெற்றதன் மூலம் 02 பயணங்களில் மாத்திரம் ஏற்பட்டிருந்த நிதி இழப்பு ரூபா 1,007,200 ஆகும். |

(ii) 2015 மே 15 ஆந் திகதிய மு.அ 1/2015/1 ஆம் இலக்கச் சுற்றறிக்கை

-----------------------------------------------------

| | |
|---|---|
| • பந்தி 4 (அ) | வரவேற்கும் நிறுவனத்தால் தங்குமிட, உணவு பானங்கள் மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த 03 வெளிநாட்டுப் பயணங்களுக்கு சீவனப் படியாக ரூபா 4,009,789 கூட்டுத் தொகை முதல் அமைச்சர், அவரது பிரத்தியேகச் செயலாளர், கல்வி அமைச்சர் மற்றும் 04 உத்தியோகத்தர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், ஒரு பயணத்தின்போது முதல் அமைச்சருக்கும் பிரத்தியேக செயலாளாளருக்கும் மாத்திரம் ரூபா 810,776 கூட்டுத் தொகை அதிகமாக சீவனப்படி வழங்கப்பட்டிருந்தது. |
| • பந்தி 3(ஆ) | 02 வெளிநாட்டுச் சுற்றுலாக்களின் போது 03 மாகாண அமைச்சர்களுக்கும் 19 உத்தியோகத்தர்களுக்கும் இடைநேர் செலவினமாக ரூபா 1,001,183 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. |
| • பந்தி 05 | உத்தியோகபூர்வப் பயணத்தின்போது தூர்துக்குழுவிற்குத் தலைமை தாங்கும் அமைச்சர் அல்லது அமைச்சரது செயலாளரது வேண்டுகோளின் பேரில் 750 அமெரிக்க டொலர்கள் வரை சீவனப்படியாக வழங்கப்படலா மெனினும், 2016 ஆகஸ்ட் 14 முதல் 20 வரையான தாய்லாந்துச் சுற்றுலாவின்போது முதல் அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உபசரிப்புப் படியாக 750 அமெரிக்க டொலர்கள் வீதம் ரூபா 1,500 அமெரிக்க டொலர்கள் கூட்டுத் தொகையாக வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 111,352 (750 அமெரிக்க டொலர்) அதிகமாக வழங்கப்பட்டிருந்தது. |

(ஊ) ஏனைய சுற்றறிக்கைகள்

---------------------------------------------

| | |
|---|---|
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2015 மார்ச் 25 ஆந் திகதிய SEC/2015/02 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 02 11(அ) ஆம் பந்தி | விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் பொருட்டு வங்கியால் அறவிடப்பட்ட ரூபா 117,045 கூட்டுத் தொகையுடைய நிறுத்தி வைத்த வரியைத் திருப்பிப் பெறுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்கவில்லை. |

(எ) 2007 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டவாக்கம்

| | |
|---|---|
| (i) 61(1) ஆம் பிரிவு | கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் சம்பந்தமாகத் தேவையான விதிகளைத் தயாரித்து, அவற்றை அங்கீகரித்து, வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டுமாயினும், 2016 செப்டம்பர் வரை அப்பணி நிறைவேறவில்லை. |
| (ii) 43(ஆ) ஆம் பிரிவு | சகல பதிவு செய்யப்பட்ட சங்கமும் சங்க நடவடிக்கைகளுக்குரிய கணக்குகள் மற்றும் புள்ளி விபரங்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய வருடாந்த இறுதிக் கணக்குகளையும் ஐந்தொகையையும் தயாரித்து குறித்த நிதியாண்டு முடிவடைந்து 03 மாதங்களுக்குள் பதிவாளருக்குச் சமாப்பிக்க வேண்டுமாயினும், இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 300 கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களில் 295 சங்கங்கள் 2015 ஆம் ஆண்டிற்குரிய கணக்குகளைச் சமர்ப்பித்திருக்க வில்லை. |

### 2.2.10 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி வரையறுக்கப்பட்ட கேகாலை ரங்வல புடவைக் கைத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குரிய காணியில் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2011 முதல் 2015 வரை ரூபா 8,464,950 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சனாதிபதியின் செயலாளரது 2015 யூன் 05 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/83 ஆம் இலக்கச் சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளுக்கு முரணாக வெளியிடப்பட்ட ஆளுநரது 2016 மார்ச் 02 ஆந் திகதிய 8/1 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக் கடிதத்தின் மூலம் சனாதிபதியின் அங்கீகாரத்துக்குட்பட அங்கீகாரம் வழங்கப்பட்டு சபரகமுவ மாகாண சபையின் 02 அமைச்சர்கள், 24 அங்கத்தவர்கள், 07 தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் அடங்கலாக 33 பேருக்கு இத்தாலிச் சுற்றுலாவுக்காக மாகாண சபை நிதியிலிருந்து ரூபா 20,645,477 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 03. வருமான முகாமைத்துவம்

### 3.1 கடந்த 05 ஆண்டுகளது வருமான அமைப்பு

கடந்த 05 ஆண்டுகளின்போது மாகாண சபையால் சேகரிக்கப்பட்ட வரி வருமானம் மற்றும் வரி அல்லாத வருமானம் பின்வருமாறு.

| ஆண்டு | வரி வருமானம் | வரி அல்லாத வருமானம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2011 | 1,943,637,444 | 416,079,145 |
| 2012 | 2,007,749,583 | 496,404.402 |
| 2013 | 2,163,127,948 | 496,200,284 |
| 2014 | 2,394,497,366 | 676,362,034 |

| | | |
|---|---|---|
| 2015 | 2,832,257,548 | 725,367,341 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கேகாலை மாவட்ட 09 பிரதேச செயலகங்களில் 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 4,814,632 கூட்டுத் தொகையுடைய வருடாந்த வரி, நெடுங்கால வரி, பயிர்களது வரி மற்றும் தாமதத்திற்கான கட்டணம் என்பன அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) றுவன்வெல பிரதேச செயலகப் பிரிவில் உள்ள யடத்வல கிராமத்தில் 2852 ஆம் இலக்க நில அளவைப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் 01 ஆம் இலக்கக் காணித் துண்டு 1983 முதல் நெடுங்காலக் குத்தகை அடிப்படையில் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்திற்குக் குத்தகையாக வழங்கப்பட்டிருந்தது. 2002 முதல் நெடுங்கால வரியாக ரூபா 1,755,040 அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும், டெலிகொம் நிறுவனம் காணியின் உரித்து அந்நிறுவனத்திற்கே உரியது என சட்டரீதியான விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தபோதும் இது வரை இச்சர்ச்சை தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டினது வருமான மதிப்பீட்டைத் தயாரிக்கையில் முன்னைய ஆண்டின் உள்ளவாறான வருமானம் கவனத்திற் கொள்ளப்படாமையால் 09 ஆம் வருமானத் தலைப்பில் ரூபா 760,338,155 குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் சபரகமுவ மாகாணத்தின் 29 உள்ளூராட்சி நிறுவனங்களில் ரூபா 267,131,080 கூட்டுத் தொகையுடைய வருமான நிலுவை மீதி நிலவியதுடன், அது முன்னைய ஆண்டை விட 28.5 சதவீதம் அதிகமாகவுமிருந்தது.

## 04. நிதிசார் மீளாய்வு

### 4.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் பற்றாக்குறை ரூபா 1,816,974,306 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 238,561,212 ஆகும். இதற்கமைய, ரூபா 2,055,535,518 நலிவு அவதானிக்கப்பட்டதுடன், நிதியத்திற்குரிய நிதிச் சொத்துக்களை தேறச் செய்து செலவு செய்தமையே இதற்கான பிரதான காரணியும் ஆகும்.

### 4.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நிகழ்வுகள்

வெளி நபர்களால் 11 மாகாண சபை அமைச்சுக்கள் / திணைக்களங்கள் என்பவற்றிற்கு எதிராக 221 சட்டரீதியான நிகழ்வுகளும் 05 அமைச்சுகள்/ திணைக்களங்களால் வெளி நபர்களுக்கு எதிராக 100 சட்ட ரீதியான நிகழ்வுகளும் 2016 டிசெம்பர் மாதமளவிலும் விசாரணை செய்யப்பட்டவாறிருந்தன.

### 4.3 அசாதாரனமான செலவின அதிகரிப்பு

மீளாய்வாண்டின் உள்ளவாறான செலவினத்தை 2015 ஆம் ஆண்டினது செலவினத்துடன் ஒப்பிடுகையில் 05 மீண்டுவரும் செலவின விடயங்களில் 37 முதல் 208 சதவீதம் வரையிலான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

## 05. அதிகார சபைக் கணக்குகள்

**அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர சாதன அதிகாரசபை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுமதி சேர் வரி (VAT) செலுத்தத் தேவையற்ற ஒப்பந்தகாரர்களின் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 2,020,898 பெறுமதி சேர் வரி (VAT) யானது மாகாண சபையின் பொருட்டுக் கொடுப்பனவு செய்ய வேண்டிய வரியாக பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. ஆயினும், அத்தொகை மாகாண சபைக்கு வழங்கப்பட்டுத் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,370,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இடத்துக்கு இடம் எடுத்துச் செல்லப்படும் (PARABOLIC) மேடை ஒன்று அதிகாரசபையின் வசமிருந்தபோதும், அதன் மூலம் 2015 ஆம் ஆண்டில் வருமானம் எதுவும் ஈட்டப்படவில்லை.

## 06. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் செயலகத்தில் உள்ள அங்கத்தவர்களுக்கான உத்தியோகபூர்வ மனையில் அறைகளை ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாக முறையான திட்டங்கள் எதுவும் இல்லாததுடன், கட்டணம் எதுவும் அறவிடப்படாது மாகாண மற்றும் மாகாணத்தைச் சேராத அங்கத்தவர்களும் அவர்களால் பெயர் குறிப்பிடப்படும் குழுவினருக்கும் கடமை மற்றும் பிரத்தியேகத் தேவைகளுக்கு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் நிலவின. சுற்றுலா விடுதியைப் பராமரிப்பதற்கும் அதனை நடாத்துவதற்கும் வருடாந்தம் ஏறக்குறைய ரூபா 1,000,000 செலவிடப்பட்டபோதும் பயனளிக்குமாறு முறையான முகாமைத்துவம் மேற்கொள்ளப்படாமையால் மாகாண சபை அதிகளவு செலவினத்தை வருடாந்தம் ஏற்க வேண்டியுள்ளது.

(ஆ) கல்வி அமைச்சின் 2007 டிசெம்பர் 13 ஆந் திகதய 2007/20 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் மிகவும் வசதிகளுடனான பாடசாலை ஒன்றில் 06 ஆண்டுகளும் வசதிகளுடனான பாடசாலைகளில் 08 ஆண்டுகளும் அதிகளவு கடமையாற்றலாமெனினும், சபரகமுவ மாகாணத்தில் உள்ள 644 பாடசாலைகளில் அக்கால வரம்பை மீறுமாறு 3,274 ஆசிரியர்கள் ஒரே பாடசாலையில் 8 முதல் 34 ஆண்டுகளாகப் பணியாற்றியிருந்தனர்.

(இ) காணி ஆணையாளர் திணைக்களத்தில் மீளாய்வாண்டிற்கு முன்னர் இருந்தே ரூபா 8,741,879 வரி வருமானம் அறவிடப்பட வேண்டியிருந்தது. இதனை 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடுவது தவறியிருந்தது.

(ஈ) விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தால் 2005, 2006 ஆம் ஆண்டுகளில் வைப்பிலிடப்பட்ட ரூபா 6,000,000 கூட்டுத் தொகையுடைய நிலையான வைப்புகள் 10க்கும் 11 க்கும் இடைப்பட்ட ஆண்டுகளாகப் பயனுள்ளவாறு பயன்படுத்தப்படாதிருந்தது.

(உ) சபகரமுகவ மாகாண முதலமைச்சரினது தலைமையின் கீழ் உள்ளூராட்சி மற்றும் சுகாதார நடவடிக்கைகள் சம்பந்தமான உயர் மட்ட முகாமைத்துவத்துடன் 2016 யூலை 27 ஆந் திகதி நடைபெற்ற சபரகமுவ மாகாண விசேட டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கூட்ட அறிக்கையினது 01 ஆம் இலக்கத்

தீர்மானத்தின்படி காயாத கழிவுகளைக் களஞ்சியப்படுத்தும் வசதிகள் அற்ற உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கட்டிடங்களை அமைத்துக் களஞ்சிய வசதியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2017 யூன் 30 ஆந் திகதியளவிலும் சபரகமுவ மாகாணத்தில் களஞ்சிய வசதி இல்லாதிருந்த 12 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு களஞ்சிய வசதி வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்விரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதித் தலைமைச் செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகத்திற்குச் சொந்தமான 08 அரசாங்க மனைகள் நெடுங்காலமாக வெளி நபர்களால் அத்துமீறிச் சுவீகரிக்கப்பட்டிருந்தபோதும், அத்துமீறிய அக் குடியேற்ற வாசிகளை அப்புறப்படுத்துவதற்குப் போதிய நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

(ஆ) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான நானாவித நிதியங்களது 07 வங்கிக் கணக்குகளில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 24,318,986 கூட்டுத் தொகையுடைய மீதியிருந்தது. 36 நிலையான வைப்புகளில் ரூபா 145,650,343 மீதியிருந்தது. அந்நிதியத்திற்கான கணக்குகள் ஆரம்பம் முதலாக இது வரை தயாரிக்கப்படாதிருந்ததுடன், இம் மீதிகள் எதுவுமே மாகாண சபை நிதியக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவுமில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டு முதல் பதிவு இரத்துச் செய்யப்பட்டிருந்த 48 கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களது கணக்கொழிப்பு நடவடிக்கைகள் 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதியளவிலும் முடிவடையாது இருந்ததுடன், 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய மாநாட்டு அறிக்கையின்படி கேகாலை கூட்டுறவு உப ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த 74 சங்கங்கள் கணக்கொழிப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந்தன. குறித்த சங்கங்களது கணக்கொழிப்பு நடவடிக்கைகள் மிகவும் மந்தகெதியில் நடைபெற்றதுடன், 425 சங்கங்கள் கணக்கொழிப்புச் செய்யப்பட வேண்டிய செயலற்ற மட்டத்தில் இருந்தன.

(ஈ) மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் அரசாங்க மனைகள் அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியில் 04 பேர் அத்துமீறிக் குடியேறியிருந்தனர். எவ்வாறாயினும், அதனைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(உ) மாகாணக் கல்வி அமைச்சினால் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலைகளில் ரூபா 133,287,704 கூட்டுத் தொகைச் செலவில் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. நிர்மாண வேலை முடிவுற்று 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் 5 தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் 2017 மார்ச் மாதமளவிலும் உத்தியோகபூர்வமாக மாணாக்கர் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மஹிந்தோதய ஆய்வுகூடங்களுக்கென 2015 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்ட ரூபா 83,500,000 மதிப்பீட்டுக் கிரயமுடைய கணனிகளும் துணைப் பொருட்களும், நாற்காலிகளும் மேசைகளும் உள்ளடங்கிய 25 வகை உபகரணங்கள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, அவ்வுபகரணங்களைப் பெற்றிராத பாடசாலைகளின் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன.

**6.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தால் சபரகமுவ மாகாண சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் ஜீப் வண்டி ஒன்றினது பதிவு சம்பந்தமான மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத் தகவல்களைப் பரிசீலிக்கும்போது அதே இலக்கமுடைய பிறிதொரு வாகனம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தால் வழங்கப்பட்டு பிரத்தியேக உரிமையாளர் ஒருவரிடம் இருப்பது புலனாகியது. இது சம்பந்தமாக காணி ஆணையாளர் நாயகம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் என்பவற்றிற்கு அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அரசாங்கத்துக்குரிய மற்றும் உள்ளவாறாகவே தொடர்ந்தும் சபரகமுவ மாகாண சபையில் இருந்து வரும் வாகனம் ஒன்றை எழுத்து மூலம் பிரிதொரு நபருக்கு ஒப்படைத்தல் மற்றும் அந்நபரால் அதே இலக்கத்துடன் போலி வாகனம் ஒன்றைப் பயன்படுத்துவது என்பன தொடர்பாக முறையான பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை. வாகன உரித்து தொடர்பாக ஏற்பட்டுள்ள சர்ச்சைக்குரிய நிலைமை காரணமாக மாகாண சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்று பயன்படுத்தப்படக் கூடிய நிலையில் இருக்கையில் 2014 டிசெம்பர் 26 ஆந் திகதி தொடக்கம் அது அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர சாதன அதிகாரசபையில் தரித்து வைக்கப்பட்டுமிருந்தது.

(ஆ) மாகாண வருமானத் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் மற்றும் ஊக்குவிப்புப் படித் திட்டம் சம்பந்தமாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) விற்பனைப் புரள்வுவரி வருமானம் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மாகாண சபைக்குக் கிடைக்காது போனதைத் தொடர்ந்து ஏனைய மாகாண சபைகள் தமது மாகாண வருமான உத்தியோகத்தர்களது ஊக்குவிப்புப் படித் திட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கும் மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொண்டிருந்ததுடன், நிதி ஆணைக்குழுத் தலைவரின் 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய FC/BE/REV/2011 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம் திறைசேரிச் செயலாளரின் தலைமையின் கீழ் 2011 மார்ச் 07 ஆந் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டவாறு மாகாண வருமான உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப் படி வழங்குவதற்கான மேலும் யோக்கியதையுடைய விதிமுறைகளைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எனினும், சபரகமுவ மாகாண சபை அவ்வறிவுறுத்தலுக்கு முரணாக முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட திட்டத்தையே அமுலாக்கியவாறிருந்தது.

(ii) மாகாண வருமானத் திணைக்கள உத்தியோகத்தர்களது நேரடிப் பங்களிப்புடன் 2014,2015 ஆம் ஆண்டுகள் இரண்டிலும் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட மேலதிக முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் ஔடத, இரசாயன மற்றும் பெட்றோலிய வரி வருமானம் என்பவற்றினது கூட்டுத் தொகை முறையே ரூபா 18,754,862 மற்றும் ரூபா 30,843,651 என்பனவாகும். அவ்விரண்டு ஆண்டுகளிலும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப் படியாக முறையே ரூபா 10,198,484 மற்றும் ரூபா 11,757,295 எனச் செலவிடப்பட்டிருந்தது. இந்த ஊக்குவிப்புப் படி வழங்கலின்போது உத்தியோகத்தர்களது நேரடிப் பங்களிப்பின் மூலம் சம்பாதித்த வரி வருமானம் கருத்திற் கொள்ளப்படாது சேகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானத்தின் அடிப்படையில் ஊக்குவிப்புப் படி வழங்கப்பட்டிருந்தது.

(iii) மாகாண சபையின் வருமானம் குறைவதைத் தடுப்பதற்காக மாகாண சபை சட்டபூர்வமாக அறவிடக்கூடிய பல்வேறு வரி வகைகளையும் வருமானத்தையும் அறவிடுவதற்கும் பல்வேறு காரணங்களால்

அறவிடப்படாதிருக்கும் மற்றும் சேகரிக்கப்படாதிருக்கும் வரியையும் வருமானத்தையும் அறவிடுவதற்கான நடவடிக்கையை எடுப்பதற்குமான விசேட நிலையியற் குழு ஒன்று நிறுவப்பட்டிருந்தது. எனினும், அக்குழு நியமிக்கப்பட்டு 04 ஆண்டுகள் கழிந்த பின்னரும் மாகாண வருமான உருவாக்கம் மற்றும் மேம்பாடு தொடர்பாக செயல் முன்னேற்றம் இல்லாத காரணத்தால் மாகாண வருமானத் திணைக்களத்தின் ஊக்குவிப்புப் படித் திட்டத்தின் கீழ் 2013 ஆம் அரையாண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு வரையான காலப்பகுதி வரை இக்குழுவின் அங்கத்தவர்களுக்கு ஊக்குவிப்புப் படியாக வழங்கப்பட்ட ரூபா 1,248,656 பயனற்ற செலவினமாகியது.

(இ) மாகாண நன்னடத்தை மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட கண் சிகிச்சை முகாம்களின்போது, தெரிவு செய்யப்பட்ட கண் நலிவுகளால் அவதியுறும் நபர்களுக்கு வழங்குவதற்காக மீளாய்வாண்டின்போது ரூபா 1,683,750 செலவில் 2,245 கண்ணாடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அக் கண்ணாடிகள் வடிவமைப்புக்கு ஏற்ப வழங்கப்பட்டதாகத் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினது அறிக்கைக் கோவையில் காணப்பட்ட போதும், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவில் இது விடயமாகத் தேர்ச்சி உடைய உத்தியோகத்தர் ஒருவரால் அவை பரிசீலிக்கப்பட்டதாகக் கணக்காய்வில் உறுதியாகவில்லை. அதற்கமைய, தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கை போலியானது அல்ல என்பது கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாக விளங்கியது.

(ஈ) 2007 ஒக்டோபர் 23 ஆந் திகதிய 23/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைச்சரின் பதவியணிக்கு ஒதுக்கப்பட்டிருந்த 02 வாகனங்கள் விபத்துக்குள்ளாகியமையால் அவை பழுதுபார்க்கப்படுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியின்போது மாதாந்தப் படியாக ரூபா 420,000 கூட்டுத் தொகை கல்வி அமைச்சருக்கு 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சரது வேண்டுகோளின் பேரில் அப்படியைக் குறித்த உத்தியோகத்தர்களுக்கு வழங்காது அமைச்சருக்கே வழங்கியதாகக் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 6.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீதித் துறை அமைச்சினது பங்களிப்பின்றி நடாத்தப்பட்ட அமைச்சரது மக்கள் சந்திப்பு மற்றும் கூட்டங்கள் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 1,936,225 செலவிற்குரிய காசோலையை உரிய நபருக்கு வழங்காது அமைச்சரது பெயரிலும் ரூபா 856,594 கூட்டுத்தொகைக்கான காசோலை ஒருங்கிணைப்புச் செயலாளரது பெயரிலும் வரையப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின்போது மாகாணக் கல்வி அமைச்சினால் ரூபா 1,897,607 செலவில் இரு செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன. அச் செயலமர்வுகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நிறுவனங்களைத் தெரிவு செய்யும்போது பொருட்கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளுக்குப் புறம்பாக நடவடிக்கை மேற்கொண்டமை, போலியான ஆவணங்களைத் தயாரித்தமை, சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாகக் கொடுப்பனவு செய்யப்பட்டமை என்பன அவதானிக்கப்பட்டன.

(இ) 2015 ஆம் ஆண்டின்போது பல்வேறு நபர்களுக்குப் பல்வேறு பொருட்களை ஆளுநர் பரிசாக வழங்கியமையால் ஏற்பட்ட செலவினம் ரூபா 4,074,115 ஆகும்.

(ஈ) இரத்தினபுரி வலயத்தில் உள்ள பாடசாலைச் சிறுவர்களுக்கு 171 கண்ணாடிகளை வழங்குவதற்கு ரூபா 299,250 செலவிடப்பட்டபோதும், அந்த வழங்கல்களுக்கான தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவை நியமிக்கும்போது 2006 பொருட் கொள்வனவு

வழிகாட்டிக் கோவையின் 2.8.1(ஆ) பிரகாரம் விடய அறிவு நிறைந்த ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிராததுடன், அக்குழுவால் குறித்த நோயை நிச்சயப்படுத்துவதற்கான விடயங்களடங்கிய பத்திரமும் மூல வடிவமைப்புடனான கண்ணாடியுடன் ஒப்பிடப்பட்டு பரிந்துரை வழங்கப்படுதலும் இடம் பெற்றிருக்கவில்லை. மேலும், சிறுவர்களைத் தெரிவு செய்வதானது மருத்துவரது வழிகாட்டலுடனும் இணக்ககத்துடனும் நடைபெறாது கண்ணாடியை வழங்கியவர்களிடையேயே அப்பணி ஒப்படைக்கப்பட்டுமிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டில் அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய வீரர்கள், வீராங்கனைகளுக்கு வழங்குவதற்காக 300 விளையாட்டுத் துறை ஆடைத் தொகுதியைக் கொள்வனவு செய்யும்போது நேரகாலத்துடன் திட்டமிடபடாமையால் பொருட் கொள்வனவு வழிகாட்டலுக்குப் புறம்பாக அவற்றைக் கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டது. 30 விளையாட்டாளர்களுக்கு ஆடைத் தொகுதி வழங்கப்படவுமில்லை. குறித்த நிறுவனத்திடம் பொருட் கொள்வனவை ஒப்படைக்கும் முன்னரும் கொடுப்பனவை மேற்கொள்ளும் முன்னரும் விளையாட்டுத் துறை ஆடைகள் குறித்த வடிவமைக்கேற்ப உள்ளதாகத் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கை பெறப்படாததுடன், அவ்வாறான சான்றுறுதிப்படுத்தலின்றி தனியார் நிறுவனத்திற்கு ரூபா 252,000 வழங்கப்பட்டுமிருந்தது.

### 6.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாணத்தில் பல்வேறு செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான அறிவையும் சந்தாப்பத்தையும் பெறும் நோக்கத்துடன் மாகாண முதலமைச்சரும் மற்றும் அவரது பிரத்தியேக பெண் செயலாளரும் 2015, 2016 ஆம் ஆண்டுகளிரண்டிலும் மேற்கொண்ட இரண்டு வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் மற்றும் மாகாண நலன்புரி மற்றும் கைத்தொழில் அமைச்சர் 2015 ஆம் ஆண்டின்போது மேற்கொண்ட ஒரு வெளிநாட்டுச் சுற்றுலா என்பவற்றிற்கு மாகாண சபை நிதியிலிருந்து ரூபா 4,335,078 கூட்டுத் தொகை செலவிட்டப்பட்டிருந்தபோதும், அதன் மூலம் சபரகமுவ மாகாணத்திற்குக் கிடைக்கப்பெற்ற நலன் எதனையும் 2017 யூன் 30 ஆந் திகதியளவிலும் இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) மருத்துவத் துறை நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிற்கு ஐக்கிய இராச்சியத்தின் பிரத்தியேக மருத்துவ மனை விடுத்த அழைப்பிற்கமைய 2016 மார்ச் 27 தொடக்கம் ஏப்ரல் 03 வரை மருத்துவத் துறையுடன் தொடர்புடைய எந்தவொரு உத்தியோகத்தரது பங்குபற்றலுமின்றி மாகாண முதல் அமைச்சரும் அவரது பிரத்தியேக பெண் செயலாளரும் மேற்கொண்ட அவ்வெளிநாட்டுச் சுற்றுலாவிற்கு மாகாண சபை நிதியிலிருந்து ரூபா 1,669,884 கூட்டுத் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) 2016 யூலை 07 ஆந் திகதி சபைச் செயலகத்தின் அங்கத்தவர் சுற்றுலா விடுதியில் மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின்போது 2014 மற்றும் 2015 ஆண்டிற்குரியதும் பாவனையற்றதுமான ரூபா 369,338 பெறுமதியான 2,092 நாட் குறிப்புப் புத்தகங்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) சபரகமுவ மாகாண சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு அங்கத்தவர்கள் 2014 பெப்ரவரி முதல் 2016 பெப்ரவரி வரையான காலப்பகுதியின்போது சிறையில் இருந்ததுடன், அக்காலப் பகுதியின்போது மாகாண சபைக் கூட்டங்கள் எதிலும் பங்குபற்றியிருக்கவுமில்லை. சிறையில் இருந்த காலப்பகுதியின்போது மாகாண சபை அவர்களது சேவையைப் பெற்றிராத போதும், அக்காலப்பகுதிக்கான சம்பளத்திற்குப் புறம்பாக சாரதிகளுக்கான படி, எரிபொருள் படி, தொலைபேசிப் படி, உபசரிப்புப் படி என ரூபா 1,191,507 கூட்டுத் தொகை வழங்கப்பட்டுமிருந்தது.

## 6.6 மோசடியாகத் தென்படும் கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபரகமுவ மாகாண சபை அங்கத்தவர்களுக்கான உத்தியோகபூர்வ மனையைப் பழுதுபார்த்து நவீனமயப்படுத்துவதற்கு 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 4,921,776 செலவிடப்பட்டிருந்தது. மதிப்பீட்டைத் தயாரித்தல், அங்கீகரித்தல் மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளுதல் என்பவற்றின்போது ஏற்பட்ட நலிவுகள் மற்றும் குறைபாடுகளின் காரணமாக மாகாண சபை நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 1,975,627 ஆகும். குறித்த இழப்பை ஒப்பந்தகாரர்களிடமிருந்து அறவிடுவதற்குத் தீர்மானித்து எழுத்து மூலம் ஒப்பந்தகாரர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும், அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) ''அருகேயுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை'' எனும் செயற்திட்டத்தின் கீழ் கழிவறைத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான முற்பணமாக ரூபா 239,277 இர/எம்/பனாவல வித்தியாலய பாடசாலை அபிவிருத்திக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 200,000 அதிபரால் 2016 நவெம்பர் 29 ஆந் திகதி பெறப்பட்டிருந்தது. நேரடிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2017 சனவரி 26 ஆந் திகதியளிவிலும் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டிராததுடன், குறித்த தொகையை உடனடியாக வழங்குமாறு வலயப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் 2017 யூலை 25 ஆந் திகதி வரை அத் தொகையை வித்தியாலயக் கணக்கில் செலவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.7 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

மாகாண சபைக்குச் சொந்தமான பல்வேறு நிறுவனங்களது ரூபா 112,400 பெறுமதியான 10 இயந்திர சாதனங்கள் 6 ஆண்டுகளாகவும் பெறுமதி இனங்காணப்படாத 146 இயந்திர சாதனங்கள் 9 முதல் 12 ஆண்டுகளாகவும் 4 கட்டிடங்கள் 1 முதல் 5 ஆண்டுகளாகவும் பெறுமதியும் பயன்படுத்தப்படாத காலமும் இனங்காணப்படாத 12 கட்டிடங்களும் 02 வாகனங்களும் பயன்படுத்தப்படாதிருந்தன.

## 6.8 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண கல்வி அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம் 2012 ஒக்டோபர் 05 ஆந் திகதி விபத்துக்குள்ளானபோதும், 2016 யூலை 25 ஆந் திகதியளவிலும் பழுதுபார்க்கப்படாதிருந்தது. விபத்துக்குள்ளான வாகனத்தின் சாரதி விபத்து நடைபெற்றதை அறிவித்திருக்கும் அறிக்கையின் படி அன்றைய தினம் அவ்விடத்தில் அவ்வாறானதொரு விபத்து நடைபெற்றதாக உறுதி செய்யப்படாமையும் வாகனத்துக்கு ஏற்பட்ட இழப்பு விபத்துக்கு இணங்க இருக்காததாலும் இழப்பை ஈடு செய்வதற்குக் காப்புறுதி நிறுவனம் மறுத்திருந்தது. எவ்வாறாயினும், காப்புறுதி நிறுவனத்திற்கு 3 ஆண்டுகளாக விண்ணப்பித்துக் கொண்டதையடுத்து இவ்விபத்து சம்பந்தமாக அவர்களுக்கு பொறுப்பு இல்லாதபோதும், மாகாண சபை அந்நிறுவனத்தின் சிறந்த வாடிக்கையாளர் ஆதலால் ரூபா 250,000 வழங்குவதற்கு காப்புறுதி நிறுவனம் 2015 ஒக்டோபர் 13 ஆந் திகதி இணங்கியிருந்தது. எனினும் பழுதுபார்த்தலுக்கான மூல மதிப்பிட்டுத் தொகையாகிய ரூபா 566,426 அதிகரித்து 2015 ஒக்டோபர் மாதமளவில் ரூபா 1,149,681 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) மாகாண நிதிசார் விதி 54.1.3 க்கமைய இழப்பு தொடர்பாக உடனடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்பானவர்களை நிச்சயித்துக் கொள்ள வேண்டுமாயினும்,

மேற்படி(அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட விபத்து சம்பந்தமாக விசாரிப்பதற்கு விபத்து நடைபெற்ற 21 மாதங்களின் பின்னர் 2014 ஆகஸ்ட் 18 ஆந் திகதியன்று கல்வி அமைச்சின் செயலாளரால் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன், விசாரணை உத்தியோகத்தர்கள் அதன் பொருட்டுக் கழித்த காலம் 15 மாதங்கள் ஆகும். ஆரம்ப விசாரணைக் குழுவானது இழப்பை சாரதியிடமிருந்து அறவிடவேண்டும் எனப் பரிந்துரை செய்திருந்தபோதும், 2017 யூன் 12 வரை இழப்பு அறவிடப்படவில்லை. மேலும், குறித்த காலப்பகுதியின்போது அமைச்சருக்கு வேறொரு உத்தியோகபூர்வ வாகனத்தை வழங்குவதற்குப் பதிலாக 2007 ஒக்டோபர் 23 ஆந் திகதிய 23/2007 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அடிப்படையில் 2012 ஒக்டோபர் முதல் 2015 டிசெம்பர் 31 வரை போக்குவரத்துப் படியாக ரூபா 1,080,000 கூட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தது. விபத்துக்குள்ளான வாகனம் சம்பந்தமாக நிதிசார் விதிகளின்படி நடவடிக்கைகளை மேற்கொண்டு பொறுப்பானவர்களை இனங்கண்டு தாமதமின்றி வாகனத்தைப் பழுதுபார்க்காமை, சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளைச் சரிவரப் புரிந்து கொள்ளாமை, அரசாங்கத்திற்கு மிகவும் சிக்கனமாக அமையும் விதத்தில் செயற்படாமை என்பன காரணமாக மாகாண சபைக்கு ஏற்பட்ட ஒட்டுமொத்த நிதிசார் இழப்பு ரூபா 1,979,681 ஆகும்.

(இ) 2013 மார்ச் 01 முதல் 2016 பெப்ரவரி 09 வரையான காலப்பகுதியின்போது வெளிநாடு சென்ற நரம்பியல் விசேட மருத்துவர் ஒருவர் உடன்படிக்கைக் கால முடிவில் சேவைக்குச் சமூகமளிக்காததால் சேவை நீங்கியதாகக் கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும், உடன்படிக்கை மீறல் காரணமாக அவ்வுத்தியோகத்தரிடமிருந்து அரசாங்கம் அறவிட வேண்டிய ரூபா 984,353 அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) கமத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்று விபத்துக்குள்ளாகியதால் ரூபா 522,000 மதிப்பீட்டில் பழுதுபார்க்கப்படுவதற்கு 2014 மே மாதம் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது, எவ்வாறாயினும், பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் 2016 சனவரி வரை வாகனம் பழுதுபார்க்கப்படாதிருந்தது. பின்னர், அந்நிறுவனம் வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்கு மறுத்து விட்டமையால் ரூபா 987,500 செலவில் வேறு நிறுவனத்தின் மூலம் பழுதுபார்க்கப்பட்டதால் ஏற்பட்ட நிதிசார் இழப்பு ரூபா 465,500 ஆகும்.

### 6.9 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பலாங்கொடைப் பிரிவுக் கல்வி அலுவலகத்தில் இரு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலைக்கு பலாங்கொடை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஒப்பந்தகாரர் ஆகியோர் இணைந்து தயாரித்த கலவன் நில அளவை அறிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முடிவுற்ற வேலைப் பெறுமதி ரூபா 26,029,799 ஆகிய ஐந்தாவது இடைக்கால விலைப் பட்டியல் பலாங்கொடை நிறைவேற்றுதரப் பொறியியலாளரால் பரிந்துரைக்கப்பட்டு அங்கீகாரத்தின் பொருட்டு பிரதிப் பணிப்பாளர் (பாடசாலைக் கட்டிடங்கள்) மாகாண பொறியியலாளர் சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பலாங்கொடை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் அறியாதவாறு அவ்விலைப்பட்டியலின் 12 ஆம் இலக்க வேலை விடயத்தினது பிரமாணப் பட்டியல் வீதம் (BOQ Rates) அதிகரிக்கும் விதத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டு முடிவடைந்த வேலைப் பெறுமதி ரூபா 27,467,263 என மாற்றஞ் செய்யப்பட்டு ரூபா 1,442,944 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. மேலும், முடிவடைந்த வேலைப் பெறுமதி ரூபா 26,493,071 ஆகிய இறுதி விலைப்பட்டியலில் 15 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரமாணப் பட்டியல் வீதம் (BOQ Rates)

அதிகரிக்குமாறு மாற்றங்கள் செய்யப்பட்டு வேலைப் பெறுமதி ரூபா 28,437,379 ஆகத் திருத்தஞ் செய்யப்பட்டு ரூபா 1,007,589 கூடுதலாகச் செலுத்தப்படுவதற்கான அங்கீகாரமும் சான்றுறுதிப்படுத்தலும் பெறப்பட்டிருந்தமை புலனாகியது.

(ஆ) காணி மற்றும் கமத்தொழில் அமைச்சினால் ஹிங்குர கும்புறயாயே பெனிகொல ஆரப் பாதுகாப்புப் பக்கச் சுவர் ரூபா 1,032,307 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தபோதும், அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறவில்லை. சாத்தியக்கூறு அடிப்படைக்கமைய இச்சுவரை அமைப்பதன் மூலம் ஏறக்குறைய 10 ஏக்கர் வயல்களுக்கு ஏற்படும் பாதிப்பு தவிர்க்கப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டபோதும், பக்கச் சுவரின் வழியாக நீர் பாய்ந்தோடி சுவரின் மூலையில் திரும்பவும் வயல்களைச் சென்றடைவதால் சுவரை அமைப்பதற்கு முன்னர் வயல்களுக்கு ஏற்பட்ட இழப்பானது நிர்மாண வேலையின் பின்னரும் அவ்வாறே தொடர்ந்தது.

## 6.10 தாமதமாகிய செயற்திட்டங்கள்

மூன்று அமைச்சுகள்/ திணைக்களங்கள் என்பவற்றால் அமுலாக்கப்பட்ட 171 நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் பல்வேறு காரணங்களின் நிமித்தம் தாமதமாகியதுடன் 06 அமைச்சுக்கள் / திணைக்களங்கள் என்பவற்றினது 310 ஒப்பந்தங்கள் ஆரம்பிக்கப்படாது முற்றாகவே கைவிடப்பட்டுமிருந்தன.

## 6.11 பதவியணி நிர்வாகம்

### 6.11.1 கல்வித்துறைப் பதவியணியில் மேலதிகமும் குறைவுகளும்

(அ) மாகாணக் கல்வித் திணைக்களத்தால் சபரகமுவ மாகாணத்தில் உள்ள தற்போதைய ஆசிரியர் தேவைகளைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட உசிதமான ஆசிரியர் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பிரதான பாடங்களில் ஆசிரியர்கள் குறைவாகவும் மேலதிகமாகவும் இருந்தனர். விபரம் வருமாறு.

| | 6-11 இருபாலார் பிரிவு | | | 12-13 உயர் தரப்பிரிவு | |
|---|---|---|---|---|---|
| விடயம் | குறைவு | மேலதிகம் | பாடம் | குறைவு | மேலதிகம் |
| ஆங்கிலம் | 161 | 79 | விஞ்ஞானம் மற்றும் மேலதிக பாடங்கள் | 41 | 24 |
| தொழில்நுட்பப் பாடம் | 633 | 52 | வணிக பாடங்கள் | 33 | 43 |
| விஞ்ஞானம் | 171 | 65 | கலைப் பாடங்கள் | 37 | 163 |
| கணிதம் | 186 | 67 | தொழில்நுட்பப் பாடங்கள் | 35 | 3 |
| ஏனைய பாடங்கள் | 1433 | 334 | | | |

(ஆ) மாகாணத்தில் ஒவ்வொரு பாடத்திற்குமேற்ப ஒட்டுமொத்த ஆசிரியர் குறைவு 4,152 ஆகவிருந்தது. ஆசிரியர்களது மேலதிக எண்ணிக்கை 1,174 ஆகவிருந்தது.

(இ) மாவனெல்லை கல்வி வலயத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு அதிகமாக 484 ஆசிரியர்களும் 9 இரசாயனகூட உதவியாளர்களும் 9 பாடசாலைத் தொழிலாளர்களும் சுகாதாரத் தொழிலாளர்களும் பணியிலமர்த்தப்பட்டிருந்தனர்.

### 6.11.2 சுகாதாரத் துறைப் பதவியணியின் மேலதிகமும் குறைவும்

சுகாதாரத் துறையின் ஒவ்வொரு சேவையிலும் உள்ள ஊழியர் மேலதிகமும் குறைவும் பல்வேறு நிறுவனங்களது மட்டங்களில் பின்வருமாறு அமைந்திருந்தது.

| | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் | | இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் இரத்தினபுரி மாவட்ட மாகாண மருத்துவ மனைகள் | | கேகாலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் கேகாலை மாவட்ட மாகாண மருத்துவ மனைகள் | | எம்பிலிபிட்டிய மருத்துவ மனை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மேலதிகம் | குறைவு | மேலதிகம் | குறைவு | மேலதிகம் | குறைவு | மேலதிகம் | குறைவு |
| மருத்துவர்கள் | - | 4 | - | 92 | - | 35 | - | 8 |
| தாதியர் | - | 1 | - | 117 | 20 | 19 | - | 56 |
| ஔடதவியலாளர் | - | - | - | - | - | 7 | - | 5 |
| பொதுசன சுகாதாரப் பரிசோதகர் | - | - | - | 29 | - | 4 | - | - |
| குடும்ப சுகாதார ஊழியர் | - | - | - | 150 | - | 104 | - | 9 |
| மருந்தாளர் | - | - | - | 31 | - | 10 | - | 1 |
| நோயாளிகளைப் பராமரிப்போர் | - | - | - | 25 | - | 39 | - | 26 |
| மருத்துவ இரசாயனகூடவியலாளர் | - | - | - | 18 | - | 6 | - | 2 |
| பூச்சிகள், புழுக்கள் தொடர்பான விஞ்ஞான உதவியாளர் | - | - | - | 14 | - | 7 | - | - |
| சாரதிகள் | - | - | - | 19 | - | 14 | - | 2 |
| பொதுசன சுகாதாரத் துறை உத்தியோகத்தர் | 1 | - | - | 13 | 10 | - | - | - |
| பாடசாலைப் பல் மருத்துவர் | - | - | - | 17 | - | 4 | - | - |
| காவலாளிகள் | - | - | - | 51 | - | 20 | - | - |
| கணக்காளர் | - | 1 | - | - | - | 2 | - | 1 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | 5- | - | 38 | 40 | - | 7 | - |
| சுகதார சிற்றூழியர் | - | 4 | 102 | - | 322 | - | 24 | - |
| தொழிலாளர் | - | - | - | 77 | - | 14 | - | 11 |
| சிற்றூழியர் | - | 1 | - | 8 | - | 5 | - | 3 |
| ஏனையவை | - | 8 | - | 26 | - | 35 | - | 6 |
| மொத்தம் | 1 | 24 | 102 | 725 | 392 | 325 | 31 | 130 |

## 6.12 ஔடத முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரத்தினபுரி மாநகர சபையின் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் 2017 சனவரி 09 ஆந் திகதி தடுப்பூசி தொடர்பான நேரடிப் பரிசோதனையின்போது தடுப்பூசிப் பதிவேட்டின் மீதிக்கும் நேரடிப் பரிசோதனை மீதிக்குமிடையே 624 தடுப்பூசிக் குறைவும் 287 மேலதிகமும் காணப்பட்டன.

(ஆ) பெல்மதுல்ல சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்துக்குரிய ஔடதப் பதிவேடு, சத்திர சிகிச்சைப் பாவனைப் பொருள் பதிவேடு, குடும்ப அமைப்பு உபகரணப் பதிவேடு மற்றும் தடுப்பூசிப் பதிவேடு போன்ற கையிருப்புப் பதிவேடுகளில் கையிருப்புப் பெறுவனவும் வழங்கலும் 2016 நவெம்பர் 05 ஆந் திகதியளவிலும் நாளது வரையாக்கப்பட்டிராததால் பிரதேச ஔடத வழங்கல் கூறிலிருந்து பெறப்பட்ட 705,745 ஔடதக் கையிருப்புக் கூறுகள் புத்தகங்களில் பதியப்படாதிருந்தமை தெரிய வந்தது.

(இ) பெல்மதுல்ல சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகக் கையிருப்புப் பதிவேடுகளில் 2016 நவெம்பர் 05 இல் உள்ளவாறு இறுதியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பெறுவனவுகள் மற்றும் வழங்கல் என்பவற்றின் பிரகாரம் கணக்காய்வில் கணிக்கப்பட்ட மீதிகள் நேரடிக் கையிருப்புடன் இணக்கஞ் செய்யப்பட்டபோது 14 வகையைச் சேர்ந்த 1,476,661 கூறுகளது கையிருப்புக் குறைவும் 03 வகையைச் சேர்ந்த 15,449 கூறுகளது மேலதிகமும் காணப்பட்டன.

(ஈ) சகல பதிவு செய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்குமென 02 திரிபோஷ பெக்கட்கள் வீதம் மாதாந்தம் விநியோகிக்கப்பட வேண்டுமாயினும், இரத்தினபுரி மாநகரசபை சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் மாதாந்த நலன்பெறுநர் மற்றும் கையிருப்பு (எம்.பீ.ஐ) அறிக்கையின் பிரகாரம் பரிசீலிக்கப்பட்ட 11 மாதங்களுக்குரிய பதிவு செய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களில் 3 முதல் 89 சதவீதம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பாலூட்டும் தாய்மார்களில் 29 முதல் 85 சதவீதம் வரையிலானவர்களுக்கு திரிபோஷ வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், 2016 நவெம்பர் மாத திரிபோஷ மாதாந்த நலன்பெறுநர் மற்றும் கையிருப்பு (எம்.பீ.ஐ) அறிக்கையின் பிரகாரம் காலாவதியாகியமை காரணமாக 83 பக்கெட்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன.

## 6.13 மாகாண வீதி அபிவிருத்தியும் முன்னேற்றமும்

மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினது நிதியேற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டின்போது நிர்மாணித்திருந்த மாகாண வீதிகள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உடவளவையில் உள்ள 15 கிலோமீட்டர் நீளமான தேசிய வனப்பூங்காவின் ஹந்தகிரிய இரண்டாவது நுழைவுப் பாதையை நிர்மாணிக்கையில் நேரடி மணித்தியால அடிப்படையிலமைந்தவாறு பாதையின் இருமருங்கிலும் காட்டைச் சுத்திகரித்து நீர் வழிந்தோடுவதற்கு இயலுமானவாறு பாதையின் முற்புறத்திலும் இரு பக்கங்களிலும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுவதுடன், 2016 டிசெம்பர் 30 ஆந் திகதியளவில் முடிவடைந்த வேலைகளுக்கான ரூபா 2,654,740 பெறுமதிக்கான விலைப் பட்டியல் பலாங்கொடை நிறைவேற்று பொறியியலாளரால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. 2017 சனவரி 05 ஆந் திகதிய நேரடிக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது 2 கிலோமீட்டர் வேலை முற்றாக முடிவடைந்திருந்ததுடன் 6.9 கிலோமீட்டர் தூரத்திற்கு வீதியின் இருபக்கக் காடுகள் மாத்திரம் சுத்திகரிக்கப்பட்டு அரைப்பங்கு வேலை முடிவடைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எனினும், பரிந்துரை செய்யப்பட்ட விலைப்பட்டியலின் பிரகாரம் நிறைவடைந்த இயந்திர சாதன மணிக் கணக்கும் உள்ளவாறு முடிவடைந்த வேலைகளின் பொருட்டுப் பயன்படுத்தப்பட வேண்டிய இயந்திர சாதன நேரமும் கருத்திற் கொள்ளப்படுமிடத்து 349.08 இயந்திர மணித்தியாலங்களுக்கு வேலை நடைபெறாமலேயே ரூபா 1,332,780 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) எம்பிலிபிட்டிய பிரதேச சபையினது கண்காணிப்பின் கீழ் கோமாரிக்கா கொங்கிரீட் வீதியின் இரு பக்கங்களிலும் சிறு கற்களைப் பதிக்கும் செயற்திட்டத்தின் கீழ் வீதியின் பாதுகாப்பையும் இடவசதியையும் அதிகரிக்கும் நோக்குடன் அதனை இறுக்கமடையச் செய்வதற்குப் பதிலாக அங்கீகரிக்கப்படாத வகையிலான மண்ணால் நிரப்பப்பட்டிருந்தது. மேலும் 1421.4 கன மீட்டர் மண்ணிற்கு ரூபா 1,941,490 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், நேரடிப் பரிசோதனையில் உள்ளவாறு 1229.63 கன மீட்டர் மண் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தமை புலனாகியதால் 191.77 கனமீட்டருக்கு ரூபா 261,939 அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டமை தெரிய வந்தது.

(இ) எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இஹல ஆதொலுவ வீதி, பஹல ஆதொலுவ வீதி, மிரிஸ்வெல்பத்த பாடசாலை மாவத்தை

என்பவற்றில் தாரிட்டு வீதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின்போது வீதியின் இரு பக்கங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட வகையான மண்ணைப் பரவுவதற்கென ரூபா 424,778 கூட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும், முடிவடைந்த இவ்வேலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின்போது அவ் வேலைகள் எதுவுமே நடைபெறவில்லை எனத் தெரிய வந்தது. மேலும், மேற் குறிப்பிட்ட மிரிஸ்வெல்பன பாடசாலை மாவத்தையின் 400 மீட்டருக்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், உள்ளவாறு அவ்வீதியின் நீளம் 375 மீட்டர் மாத்திரமே என்பதும் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, வேலை மேற்கொள்ளப்படாத 25 மீட்டருக்கும் ரூபா 121,142 கூட்டுத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) எம்பிலிபிட்டிய பிரதேச சபையினது கண்காணிப்பின் கீழ் முல் எடியாவல ஜயவீர மாவத்தை மலபலாவ தங்கஹயாய வீதி மற்றும் புறுத்தகந்த வெவ ஊடாக நிந்தகம் பெலெஸ்ஸ வீதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களின்போது இருபக்க கொங்கிரீட் தளத்தையும் அங்கீகரிக்கப்பட்ட வகையிலான மண்ணைப் பயன்படுத்தி இறுக்கமடையச் செய்வதற்கு ரூபா 163,937 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முடிவடைந்த இவ்வேலை நேரடிப் பரிசோதனைக்குள்ளானபோது அவ்வேலைகள் முடிவடையாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட மலபலாவ தங்கஹயாய வீதிக்கு ரூபா 1,893,002 மற்றும் புறுத்தகந்த வெவ ஊடாக நிந்தகம் பெலெஸ்ஸ வீதியை அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்கு ரூபா 1,447,763 செலவிடப்பட்டிருந்தபோதும் அவ்வீதிகளது நிர்மாண வேலை திருப்தியாக அமையாதிருந்ததும் அவதானிக்கப்பட்டது.

(உ) மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா விளையாட்டுத்துறை மற்றும் இளைஞா ̇விவகார அமைச்சினால் கொங்கிரீட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட 206.4 மீட்டர் நீளமான எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்குரிய ககேயாய எல அத்தர வீதியின் 34.1 மீட்டர் நீள தனி நபர் வீடு ஒன்றினது வளவில் அமைந்திருந்ததும் அதன் பொருட்டு ரூபா 286,508 வழங்கப்பட்டிருந்ததும் தெரிய வந்தது.

## 6.14 வங்கிக் கணக்கிணக்கம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபையின் கீழுள்ள பல்வேறு நிறுவனங்களது வங்கிக் கணக்குகளின் மூலம் வழங்கப்பட்டு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததும் 06 மாதங்களைக் கடந்ததுமான ரூபா 7,176,904 கூட்டுத் தொகையுடைய 134 காசோலைகள் சம்பந்தமாக சபரகமுவ நிதிசார் விதி 283.4 க்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. 06 மாதங்களைக் கடந்த ரூபா 185,664 கூட்டுத் தொகையுடைய 33 தேறாத வைப்புகள் சம்பந்தமாகத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவு மில்லை.

(ஆ) இனங்காணப்படாத 03 வங்கிக் கணக்குகளது கூட்டுத் தொகை ரூபா 98,270 ஆகும். 06 வங்கிக் கணக்குகளில் இனங் காணப்படாத ரூபா 770,004 கூட்டுத் தொகையுடைய செலவு மீதி இருந்தது.

## 07. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 7.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

மீளாய்வாண்டின்போது ஒரு அமைச்சிலும் ஒரு திணைக்களத்திலும் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் வீதமும் 25 அமைச்சுகள்/ திணைக்களங்களின் 03 கூட்டங்கள் வீதமும் கூட்டங்கள் நடைபெற்றிருந்தன.

## 7.2 பொருட் கொள்வனவுத் திட்டம்

தலைமை அமைச்சு மீளாய்வாண்டின்போது பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை.

## 7.3 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்கான கணனிகளைக் கொள்வனவு செய்கையில் ஏற்பட்ட குறைபாடுகளால் சபையின் நிதியத்திற்கு ரூபா 7,961,213 இழப்பு ஏற்பட்டிருந்தமை தொடர்பாக 2016 ஒக்டோபர் 04 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குக் குழு பரிசீலித்ததையடுத்து வெளி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பரிசீலனைகளுக்குப் புறம்பாக உள்ளகப் பரிசீலனைகளும் முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டபோதும், 2017 யூன் 15 ஆந் திகதி வரை அப் பணிப்புரைக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண கணக்குக் குழுவில் கலந்துரையாடப்பட்ட 2001 முதல் 2012 வரையிலான 12 ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடங்கிய 08 அமைச்சுக்கள் / திணைக்களங்கள் என்பவற்றினது 100 கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாகக் குறித்தபடி திருத்தங்கள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 08. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபரகமுவ மாகாண சபையின் நிறுவனத் தலைவர்களதும் தலைமைச் செயலாளரதும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடும் நிதிசார் கட்டுப்பாடும்
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) செயற்திட்ட அமுலாக்கல்
(எ) பாடசாலை முகாமைத்துவம்
(ஏ) மருத்துவ மனை முகாமைத்துவம்